கற்பகம்
திங்கள் இதழ்
Katpakam
விலை ரூபா 10.00
மலர்-06 ஜனவரி -2014 இதழ்-72

## குறளமுதம்-72

வள்ளுவர் வகுத்தவழியில் எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-8 அறத்துப்பால் அன்புடைமை**

அன்பிலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

அன்பில்லாதவர் எல்லாப் பொருட்களையும் தமக்கே பயன்படுத்துவர். அன்புடையவரோ, தம் உடம்பையும் பிறர்க்குப் பயன் படுத்துவர்.

பனை தென்னை வள கூ. சங்கங்களின் அங்கத்தவர்களான

# சாற்று உற்பத்தியாளர்கள் கடினமான உழைப்பாளிகள்!

சர்வதேச கூட்டுறவுதின விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர்

சாற்று உற்பத்தியில் ஈடுபடுகின்ற இவ் அங்கத்தவர்கள் ஒரு கடினமான உழைப்பாளிகள் ஆவார்கள். அவர்களது உழைப்புக்கு ஏற்ற ஊதியம் ஓரளவுக்கு கிடைக்கின்ற போதிலும் முற்றுமுழுதாக கிடைக்க இச்சங்கங்கள் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இச்சங்கங்களுக்கு எமது பிரதேச செயலகம் என்றென்றும் உதவுவதற்கு தயாராக இருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ஜெயசீலன் அவர்கள்.

கடந்த மாதம் 23ம் திகதி பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத்தின் உபதலைவர் தலைமையில் நடைபெற்ற 91வது சர்வதேச கூட்டுறவுதினம் மற்றும் கௌரவிப்பு விழா நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இப் பனம்சாறு ஒரு பானமாக எமது முன்னோர்களால் அருந்தப்பட்டு வந்துள்ளது. அதனால் அவர்களுடைய ஆயுட்காலமும் நீண்டதாக இருப்பதோடு, சுகதேகிகளாகவும்

(2ம் பக்கம் பார்க்க)

**கற்பகம் வாசகர்கள் அனைவருக்கும் இனிய நத்தார், புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

## ஸ்ரீ அம்பாள் முன்பள்ளியின் பரிசளிப்பு விழா

மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ. சங்கத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற ஸ்ரீ அம்பாள் முன்பள்ளியின் பரிசளிப்பு விழா கடந்த மாதம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையால் நடத்தப்பட்ட 91வது சர்வதேச கூட்டுறவுதின விழா போட்டிகளில் முன்பள்ளி மாணவர்களுக்கான குழு நடனப் போட்டியில்

(8ம் பக்கம் பார்க்க)

## சமாசம், ரூபா 10 இலட்சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கியது!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரின் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு கல்வி அபிவிருத்தி சமூக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் ரூபா 10 இலட்சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்களை இவ்வருடம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.


மேற்படி திட்டமானது 2002ம் ஆண்டு தொடக்கம் ஆண்டுதோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்மூலம் வருடாந்தம் சராசரியாக சுமார் 3 ஆயிரத்து 500 அங்கத்தவர்களின் பிள்ளைகளும் 520 பணியாளர்களின் பிள்ளைகளும் 150 முன்பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளும் இப்பாடசாலை உபகரணங்களை பெற்றுவருவதாக சமாசம் தெரிவித்துள்ளது.

## சுன்னாகம் சங்கத்தில் கூட்டுறவு, கௌரவிப்பு விழா

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 91வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை கடந்த நவெம்பர் மாதம் 29ம் திகதி சங்க மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.



சங்கத் தலைவர் திரு ப.தவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.கூ.அ.உ. ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக பனை அபி.சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், மாவட்ட கூட்டுறவு அபி. அலுவலர் திரு பொ. மோகன், (2ம் பக்கம் பார்க்க)



கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினால் நடாத்தப்பட்ட 91வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் ஆரம்ப நிகழ்வின்போது...
(மேலும் படங்கள் உள்ளே)

**"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"**

சிந்தனைத்துளி

"தூய ஒழுக்கமுள்ள ஒருவன் யாருக்கும் தீமை செய்யமாட்டான்"

-சுவாமி விவேகானந்தர்-

# கற்பகக்கரு

## சமூக உறவு அவசியம்!

கூட்டுறவு சங்கத்தில் அங்கத்தவராக இணைந்திருக்கின்ற ஒருவர் அவ் அமைப்பின் சகல நடவடிக்கைகளையும் அறிந்தவராக, தெரிந்தவராக, புரிந்துகொண்டு செயற்படுபவராக தம்மை வளப்படுத்திக் கொண்டாலே அந் நிறுவனத்தில் தொடர்ந்து தமது பங்களிப்பினை எதுவித குறைகளுமின்றி வழங்கமுடியும்.

மனித வாழ்விலும்கூட ஒரு மனிதன் தான் சார்ந்த சமூகத்தில் சிறப்பாக வாழவேண்டுமானால் அச்சமூகத்தைப் பற்றி அறிந்தவராகவும் சமூகத்துடன் இணைந்து வாழ்பவராகவும் தன்னை மாற்றிக் கொண்டாலே அச்சமூகத்தில் சிறப்பாக வாழமுடியும்.

கூட்டுறவு அமைப்பும் ஒரு சமூக அமைப்பாகும். தலைமுறை தலைமுறையாக எமது மூதாதையரினால் தோற்றுவிக்கப்பட்ட கூட்டு வாழ்க்கை அதன் மூலம் பெற்றுக்கொண்ட விழுமியங்கள் நெறிகள், ஒழுக்கங்கள், பட்டறிவுகள், கலைகள், இலக்கியங்கள், சமய வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பல வகைப்பட்ட அம்சங்களின் தொகுப்பே மனிதப் பண்பாடாகும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

இவை மக்களுக்கு சிறந்த வழிகாட்டியாக எல்லாக் காலங்களிலும் ஏற்ற வகையில் உதவுவதுபோல எமது கூட்டுறவு அமைப்பும் கூட்டுறவை நம்பி வாழும் உண்மைக் கூட்டுறவாளனுக்கு கைகொடுக்கின்றது. மேற்கூறப்பட்ட விழுமியங்களை கூட்டுறவுப் பண்பாடுகளையும் கூட்டுறவாளர்கள் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் எவ்விதமான இடைஞ்சல்களுக்கோ அல்லது தடைகள் ஏற்படாமல் தமது இலக்கினை நோக்கி செல்லக்கூடியதாக இருக்கும்.

ஒரு கூட்டுறவு அமைப்பு உருவாகியதன் நோக்கங்கள் உண்மையாக நிறைவேற்றப்பட வேண்டுமேயானால் அவ்வமைப்பு தாம் சார்ந்த சமூகத்தின்மீது கூடிய அக்கறை கொண்டு செயற்பட வேண்டும். முன்பே குறிப்பிட்டதுபோல கூட்டுறவு அமைப்பு ஒரு சமூக அமைப்பாகும்.

எனவே சமூகத்திலுள்ளவர்களின் தேவைகளையும் நிறைவேற்றுபவர்களாக கூட்டுறவாளர்களாகிய நாம் எமது திட்டங்களில் அவ் அம்சங்களைச் சேர்த்துக்கொள்வதன்மூலம் அச்சமூகத்தினர் பெற்ற நலன்கள் ஊடாக எமது நிறுவனத்துக்கு ஏற்படுகின்ற இடர்களை சுலபமாக நீக்க உதவிபுரியும்.

எமது கூட்டுறவு அமைப்புக்கள் செயற்படுகின்ற பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் இருக்கின்ற சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சமுர்த்தி அமைப்புக்கள், ஆலயங்கள், கல்விச் சாலைகள் போன்றவற்றுடன் சுமூகமான உறவைப் பேணி அவர்களுடைய தேவைகளை எம்மால் இயன்ற வரையில் நிறைவுசெய்ய முன்வருவோமேயானால் எமது நிறுவனங்கள் ஒரு குறுகிய வட்டத்துக்குள் இல்லாது பன்முகப்படுத்தப்பட் ஒரு நிறுவனமாக மிளிர்வதற்கு உதவுவனவாக இருக்கும் என்பதை கற்பகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

ஆசிரியர்

## சாற்று உற்பத்தியார்கள் .................. 1ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்ந்ததை நாம் நேரடியாகவே கண்டிருக்கின்றோம்.

இப்பனம் பானத்தை அளவோடு அருந்தி மகிழ்வோடு வாழப் பழகிக் கொள்வோமாக இருந்தால் எமது முன்னோர்கள் போல நோயற்றவர்களாக நீண்டகாலம் நாம் வாழக்கூடியதாக இருக்கும்.

மேலும் இச்சங்கங்கத்தினுடைய கிளை நிலையங்கள் தொடர்பாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் என்னுடன் தொடர்பு கொண்டபோது நாம் அவர்களுடைய கோரிக்கைகளை அங்கத்தவர்களின் நலன்கருதி உடனுக்குடன் நிறைவேற்றியிருக்கின்றோம். தொடர்ந்தும் இந்நிறுவனங்களுக்கு உதவுவதற்கு தயாராகவே உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு பி.கிருஸ்ணானந்தன் அவர்கள் தனதுரையில்,

நான் சிறுவனாக இருந்த போது எனது தந்தையார் இப்பனம்பானம் அருந்தியது மட்டுமல்லாது எனக்கும் அதனை பருகத் தந்தார். இது ஒரு சுவை மிகுந்த பானமாக இருப்பதால் இதன் உற்பத்தியை நவீன முறையில் மேற்கொள்ள முயற்சிகளை உரிய சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும். இச்சங்கங்களின் நிதி தொடர்பான பாதுகாப்பினையும் உதவிகளையும் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு எமது வங்கியே வழங்கி வருகின்றது. எதிர்காலத்திலும் இச் சங்கங்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்கு தயாராகவே உள்ளது எனவும் தெரிவித்தார்.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக கூ.அ.உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மா.கூ.அலுவலர் திரு பொ.மோகன், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம், கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார், தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராஜா, புலோலி வடக்கு -கிராம சேவையாளர் திருமதி தி.சாருமதி, வடமராட்சி பனை தெ.வ.அ.கூ.சங்.கொத்தணி பொதுமுகாமையாளர் திரு மு.நவநேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் அங்கத்தவர்களான திரு வே.கிருஸ்ணபிள்ளை, திரு ச.பன்னீர்செல்வம், திரு கி.செல்லக்கிளி, திருமதி விஜயரத்தினம் கெங்காதேவி, திருமதி இராசரத்தினம் செல்வராணி, திருமதி தவராசா மகேஸ்வரி, திருமதி திலீபன் அபிராமி, திரு திரு அ.காந்தரூபன், திரு வை.நாகேஸ்வரன், திரு செ.ரமணன், திரு சண்.பாரதிதாசன், திரு வை.உதயகுமார், திரு ம.நவயுகன் ஆகியோரும், பணியாளர்களான திரு சி.ஜோ.கொன்விக்ரர், திரு கி.செல்வம் ஆகியோரும், புலமைப்பரிசில் சித்திபெற்ற செல்வி அபிலாஷா சிவகுமார், பல்கலைக்கழகம் தெரிவான செல்வி மேரி நிரோஜினி ஜோசப் கொன்விக்ரர், செல்வி தர்சிகா தேவதாசன் க.பொ.த.(சா/த)இல் அதிவிசேட சித்திபெற்ற (9ஏ) செல்வி கோகிலா சிவகுமார் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டதுடன், கூட்.அ.உத்தியோகத்தர் திரு தி.பிரதீப், சமாச பொதுமுகாமையாளர் திரு ஜே.பி.குணரத்தினம், கவிஞர் க.எதிர்வீரசிங்கம் ஆகியோருக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன். ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு தங்கச் சங்கிலி, தங்க மோதிரம் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

## சுன்னாகம் சங்கத்தில் கூட்டுறவு....... 3ம் பக்க தொடர்ச்சி

யாழ்.கூ.சபை செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம், சமாசத் தலைவர் திரு நா.கணேசன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் காவல்துறை அதிகாரி திரு கஜான் சமரக்கோன், வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் திரு சோ.சுகிதரன், மல்லாகம் மதுவரி அதிகாரி திரு க.நாகேந்திரம், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு ப.பார்த்தீபன், கூட்.அபி.அலுவலர் திரு ஞானதயாளன், சமாச பொதுமுகாமையாளர் திரு ஜே.பி குணரட்ணம், வலிகாமம், வடமராட்சி கொத்தணிகள், மற்றும் வலிகாமம் பகுதி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், சித்த வைத்திய கூ.சங்கத்தின் தலைவர், முகாமைப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் 2012ம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், 91வது கூட்டுறவு தினப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் மற்றும் 2012இல் ஓய்வு பெற்ற அங்கத்தவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

# மகளிர் குழுக்களின் சுயதொழில் அபிவிருத்தியில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

சமாசத்தால் 91வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு மகளிர்குழு உறுப்பினர் களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் 2ம் இடம் பிடித்த பருத்தித்துறை மகளிர்குழு உறுப்பினர் **செல்வி பா.மதனரூபி** எழுதிய கட்டுரை பிரசுரமாகிறது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டில் மகளிர் குழுக்களின் சுய தொழில் அபிவிருத்தி தொடர்பானது.

அதாவது, "கணக்கிலா பயன் தரும்". நம் கற்பகதருவைப் பற்றி பலர் பலவிதமான செயற்பாடுகளை அறிந்திருப்பீர்கள். ஆம் அக் கற்பகதருவுக்கென செயற்படுவதே நம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

இச்சங்கங்கள் அங்கு கடமைபுரியும் பணியாளர்கள், ஊழியர்கள, முகாமையாளர்கள், அதில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்களுக்கு என அரியபல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்றன. அந்த வகையில் மகளிர் குழுக்களுக்கெனவும் சில அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வெற்றிநடை போடுகின்றது.

இந்த மகளிர் குழுக்களில் இந்தப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமைபுரியும் ஊழியர்கள், அங்கத்தவர்களது பிள்ளைகள் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இதனைவிட, இந்தப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ள கிராமத்தை சுற்றியுள்ளவர்களும் அவர்களுக்குரிய (சீவல் தொழில்) தொழில் செய்கின்றார்களோ இல்லையோ அவர்களும் அங்கத்துவம் வகிக்கின்றார்கள். இதில் அங்கத்துவம் வகிப்பவர்கள் மட்டும் நன்மை பெறவில்லை. ஒட்டுமொத்த மகளிருமே நன்மை அடைகின்றனர்.

அந்த வகையில் "சுய தொழில் அபிவிருத்தி" அதாவது அவர்கள் சுயமாக தமக்கு தெரிந்த ஏதாவது ஒரு தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு, அத்தொழிலில் ஈடுபடுவதற்கென நம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் • கடன்கள் வழங்கி மகளிரை ஊக்குவித்துக் கொண்டு, அந்நியச் செலாவணி வருவாயையும் பெற்றுக்கொள்கின்றன.

கிராமங்கள் தோறும் நம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடானது பரந்து விரிந்து காணப்படுகின்றது. படித்தவர்கள் மட்டும் பயன்பெறவில்லை. படிப்பறிவு குறைந்த பாமரங்களும் பல பயன்களைப் பெற்றுள்ளார்கள்.

கிராமங்கள்தோறும் சுய தொழில் அபிவிருத்திக்கான கடன்களைப் பெற்று தனி ஒரு மனிதன் மட்டுமல்ல, அவனது குடும்பம், அவனது சமூகம் என வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடன் பெறுவது ஒருவர் அதனால் பயன் பெறுவது பலர்.

தற்பொழுது வெளிநாட்டவர்களின் வருகையும் தென்பகுதி வாழ் மக்களின் வருகையும் வடக்கு மாகாணத்தில் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. அங்கிருந்து வருகைதரும் உல்லாசப் பயணிகள் பெரிதும் விரும்பும் பொருட்களாக இப்பனம் பொருள் உற்பத்திகளே காணப்படுகின்றன.

இப்பனம் பொருள் உற்பத்திகளான பனாட்டு, பாணிப் பனாட்டு, ஒடியல், புழுக்கொடியல், பனங்கட்டி, கல்லாக்காரம், பனம் பானம் என்பனவும், இதனைவிட பனையோலையினால் தயாரிக்கப்பட்ட கடகம், தீந்துப் பெட்டி, கைப் பைகள், தொப்பிகள், பாய்கள் இன்னும் பல அலங்காரப் பொருட்கள் அதாவது, வீடுகளில் அழகுக்காக வைக்கப்படும் அழகு சாதனப் பொருட்கள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் அவர்கள் கொள்வனவு செய்கின்றார்கள். அதன்மூலம் அந்நியச் செலாவணி வருகையும் இப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை வந்தடைகின்றன.

மேலும் இக்கைத்தொழில்கள் மட்டுமல்ல இன்னும் பல, அதாவது பனங்களியினை போத்தலில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். பனம்பானத்தை சோடாவைப் போல போத்தலில் அடைத்து தயாரித்து அதனையும் ஏற்றுமதி செய்து வருவாயை ஈட்டிக்கொள்கின்றார்கள் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர்.

மேலும் கைப்பணிப் பொருட்கள் விற்கப்படும் இடமாக "கற்பகம்" விளங்குகின்றது. இங்கு விற்கப்படும் பொருட்கள் தனியாகவோ, கூட்டாகவோ பெண்கள் இணைந்து கைப்பணிப் பொருட்களை தயாரித்து வருமானம் ஈட்டிக் கொள்கின்றார்கள். தானும் தன் சார்ந்தோரும் ஓரளவு திருப்திகரமாக வாழ இச்சுயதொழில் கடன் திட்டமானது உதவிபுரிகின்றது.

இதனைவிட, அங்கத்தவர்களின் பிள்ளைகள் கல்விகற்று வரும் காலங்களில் பண உதவிகள் தேவைப்படும்போது அவர்களுக்கும் கடன் திட்டங்கள்மூலம் உதவி செய்து, அவர்களையும் வழிப்படுத்துகின்றார்கள். இதனைவிட கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கு வருடாவருடம் கொப்பிகள், பேனா, பென்சில் என கல்வி உபகரணங்களையும் வழங்கி வருகின்றார்கள். அவர்கள் உயர்கல்வி வாய்ப்புப் பெற்று பட்டங்கள் பெறும்போது பரிசுப் பொருட்களும் பணப்பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கின்றார்கள்.

மேலும் சுயதொழில் அபிவிருத்தி என்னும் பெயரில் மகளிருக்கென அளப்பரிய சேவைகளை செய்து கொண்டிருக்கிறார்கள் நம்

(7ம் பக்கம் பார்க்க)

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்

## 91வது சர்வதேச கூட்டுறவுதின



## த்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட

# ன விழா நிகழ்வுகளின் பதிவுகள்





## நாங்கள் அப்படித்தான்

மனிதனின் ஆதி மூலம்
ஆதாமும் ஏவாளும் என்றீர்
ஏற்றுக்கொண்டோம்
இறைவனின் பிள்ளைகளாய்
வாழ்ந்தும் காட்டினோம்
பின்னர்.....
குரங்கிலிருந்து மனிதன்
கூர்ப்படைந்தான் என்றீர்- எங்கள்
குணவியல்புகளும் அதுவாயிருந்ததால்
உண்மைதான் என்றெண்ணி
இறைவனின் பிள்ளைகள் என்ற
இனிய வரத்தை இழந்தும் வாழ்ந்தோம்
இப்போ.............

தே.யோ. தவராஜா

பன்றிக்கும் குரங்குக்கும்
பங்காய்ப் பிறந்தவனே மனிதன் என்று
புதுக்கதை பேசுகின்றீர்
எமக்கும் அது பக்காவாய்
பொருந்துவதால்
பன்றிகளே எமது மூதாதையர் என
பன்றிகளாய் வாழும்
குரங்குகளானோம்
நாளை .............

நாயும் பேயுமே நமது மூதாதையர் என
உங்கள் ஆராய்ச்சி முடிவுகள்
அடித்துக் கூறினாலும் – நாங்கள்
ஆட்சேபிக்கப்போவதில்லை
ஏனெனில் ... நாங்கள் அப்படித்தான்!

## பாரதி மீண்டும் வந்தால்?

விழிகளில் சொரியும் கண்ணீரை
தட்டிவிட விரல்கள் இல்லை
இதயத்தில் எரியும் நெருப்பை
அணைத்துவிட பக்கத்துணையில்லை
அழுகின்ற பிள்ளைக்கு கொடுத்திட
மார்பினிலே பால் சுரக்கவில்லை
ஒரு சாண் வயிறு
ஒரு மாதமாய் பட்டினி
எதிர்காலம் தெரியா கேள்விக்குறியோடு
இவள்போல் பலபேர் வாழ்க்கை
கூலிக்காரன்கூட
மூன்று மனைவி கட்டுவதை
வரவேற்கும் உலகம்
இவள்போல் பெண்ணை விதவை என்று
ஏனோ மூலையில் முடக்குது
மங்கள நாளில் இவளை
அமங்கலி என்று வசை பாடுது
பாரதி மீண்டும் வந்தால்
எரித்திடுவான் இந்த உலகை!

—— T.கமல் ——
காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## காத்திரு காதலி

Vா.மதனவரதி, அல்வாய்

பூ இதழ் காய்ந்து
புழுதி படர்வதா?
பூவுடல் கொதித்து
பொலிவிழந்து போவதா?
மொழிபேசும் விரல்கள்
மௌனமாகிப் போவதா?
கதை கூறும் கூந்தல்
கருமைவிட்டு உதிர்வதா?
மறுபடி பிறந்து
மறுமலர்ச்சி செய்வோமா?
முட்களாய் நினைவுகளை சுமந்து
முகங்காட்டி நிற்கவா?
காவியங்கள் பல படைத்து
வரலாறு காட்டவா?
காதல் கண்ணாடித்
துண்டுகளாய் நொறுங்குவதா?
பொய்-புகழ் பேசி
நாங்கள் பிழைக்கவா?
காத்திரு காதலி..
தரித்திரக் கதைகளும் தகர்ந்து
நல்ல பொழுதுமிங்கே விடியும்!

# கவிச்சாரல்

## வாழ்க்கையின் விடிவுக்காய்

கல்வி எனும் பல எழுத்தை
கனிவுடனே கற்றிடவே
கண்ணியமாய் நாம் வந்தோம்
இன்னல் புயல் இடிந்து விழுந்து
இலக்கினையே தட்ட வர
மின்னலிலே நாம் ஏறி
வெளிநாடு சென்றிருந்தோம்
அந்நியர் நாட்டினிலே
அவரவர் மொழிகளிலே
அகதி என்ற தமிழ்ப் பெயரை
ஆங்கிலத்தில் துப்பிவிட

## காத்திருப்போம்

ஆறுதலே இல்லையென
அமைதி வழி போவோமென
அடுக்கடுக்காய் பிரச்சினைகள்
அதைத்தீர்க்க யாருமில்லை
காலமகள் வேலையினால்
கண்ணீரைச் சொரிகின்றோம்
எனக்காக வந்திடுவீர்
எனது துயர் தீர்த்திடவே
கோமகனும் கண் திறப்பான்
திருமகளும் அருள் கொடுப்பாள்
என்றெண்ணி வந்திடுவீர்
விடிவு காலத்தை நோக்கி
காத்திருக்க...

பூா.தர்சன்–தரம் 11,
யா.அச்சுவேலி சரஸ்வதி வித்.

## சிந்தனை

பழிக்குப் பழிவாங்கும் போக்கை
கைவிட்டுவிட்டு மன்னிக்கும்
மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்
பழிவாங்குவதைவிட மன்னிப்பது எளிது

வாழ்க்கையில் நீங்கள்
சாதிக்க வேண்டியவை
ஏராளமிருக்கும்போது
பழிவாங்கும் செயலில் ஈடுபட்டு
உங்கள் பொன்னான
நேரத்தை பொடியாக்காதீர்கள்

மனம் அமைதியாகவிருக்கும்
அதிகாலை நேரத்தில்
உயரிய எண்ணங்களை உருவாக்குங்கள்

எதிர்காலத் திட்டங்களை
எண்ணத் தொடங்குங்கள்
இன்றைய எண்ணம்தான்
நாளைய வாழ்வின் நம்பிக்கை

-ஆ.சீதாராம், Vருத்தித்துறை-

## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 9வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் சில பதிவுகள்...




## மகளிர் குழுக்களின் சுயதொழில்............. 

3ம் பக்க தொடர்ச்சி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

இதனைவிட முன்பள்ளிகள் தோறும் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் சம்பளத்தினையும் வழங்கி வருகின்றார்கள். இதன் மூலமும் நம் பெண்கள் பயனடைகின்றார்கள். அதாவது கிராமப் புறங்களிலுள்ள முன்பள்ளிகளுக்கு வெளியிடங்களிலிருந்து ஆசிரியர்கள் வரத் தயக்கம் காட்டுவதினாலும் சம்பளப் பிரச்சினை காரணமாகவும் வேறு வெளியிட ஆசிரியர்கள் செயற்படப் பின் நிற்கிறார்கள். எனவே அக்கிராமத்திலுள்ள படித்த பெண்களைக் கொண்டே முன்பள்ளிகள் இயங்குகின்றன. அவர்களை இனங்கண்டு, சம்பளத்தினை வழங்கி அதனை முன்னேற்றிச் செல்வதுடன், அம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பணப் பரிசுகள், பரிசுப் பொதிகள் என வழங்கி அவர்களையும் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இச்சங்கத்தினர்.

மேலும் கணினிப் பயிற்சி, கூட்டுறவுப் பயிற்சி, சிகையலங்காரப் பயிற்சி, கைப்பணிப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பயிற்சிகளையும் வழங்கி மகளிரை மேம்பாடடையச் செய்கின்றனர்.

மேலும் நானும் ஓர் மகளிர் குழு உறுப்பினராக உள்ளேன் என்பதில் பெருமையடைகின்றேன். ஏனெனில் நான் வளர்ந்தது நமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினாலாகும்.

ஏனெனில் நான் க.பொ.த. (உ/த) எழுதிவிட்டு மேற்படிப்பை தொடரமுடியாது இருந்தபோது எனக்குக் கைகொடுத்து தூக்கி விட்டது இச்சங்கமே.

இதனைவிட நான் பட்டப் படிப்பை மேற்கொண்டுவிட்டு பட்டம் பெறுவதற்காக பண அவதியுற்ற வேளை சுயதொழில் கடன் திட்டம்மூலம் பணத்தினை வழங்கி பட்டமளிப்பு விழாவில் சிறப்பாக கலந்துகொள்ள உதவியதும் நம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே!

மேலும் திங்கள் இதழான "கற்பகம்" மூலம் கவிதைக்கு, என் கல்விக்கு களம் தந்தது இப்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமே.

மொத்தத்தில் இப்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமானது மகளிரை மேம்படுத்துவதில், அபிவிருத்தி செய்வதில் முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

"கணக்கிலா பயன்தரும் கற்பகதரு" போல நம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர் குழுக்களின் சுயதொழில் அபிவிருத்தியில் முன்னணி வகிக்கின்றது.

"வாழ்க கூட்டுறவு", "வளர்க கூட்டுறவுச் சேவை", " கூட்டுறவே நாட்டுயர்வு", "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு", "ஒற்றுமையே பலம்" என்ற கோட்பாடுகளுக்கு அமைய அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோமாக!

## நிர்வாக உறுப்பினராக தெரிவு

யாழ்.மாவட்ட கூட்.ப.நல நோன்பு கூ.சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்ராக பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்கள் சார்பில் வலிகாமம் கொத்தணியின் தலைவர் திரு செ.செல்வராசா அவர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அவர்களால் கூட்டப்பட்ட மாதாந்த தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் மாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## சேவை நீடிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் சேவை நீடிப்பு பெற விரும்பும் பணியாளர்கள் இவ்வாண்டிலிருந்து உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து கூ.அ.உ.ஆணையாளரின் சிபார்சுடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென கூ.அ.உ.ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொடுப்பனவை அதிகரிக்க கோரிக்கை

சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவினை ரூபா 2 ஆயிரமாக அதிகரித்து வழங்க ஆவன செய்யுமாறு மாதாந்த கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஒழுங்குவிதிக் கோவை திருத்தங்களுடன் நடைமுறைக்கு

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் அங்கத்தவர் ஒழுங்குவிதிக் கோவை (திருத்தம் செய்யப்பட்டது) 1979ம் ஆண்டு கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தில் நடைபெற்ற மாதாந்த மாநாட்டுத் தீர்மானங்களுக்கமைவாக 2006ம் ஆண்டிலிருந்த நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்தமாதம் 19ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற கூ.அ.உ.ஆணையாளரின் தலைமையிலான மாதாந்த மாநாட்டில் இவ் ஒழுங்கு விதிகளில் கால மாற்றத்துக்கு ஏற்ப மீண்டும் சில திருத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், இம் மாதம் 1ம் திகதியிலிருந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக இக் கோவையினை சகல சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கவேண்டும் எனவும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய சமாசத்தால் இவ் ஒழுங்குவிதிக் கோவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சமாச கல்வித் திட்டத்தில் சங்கங்களின் கல்வித்திட்டமும் சேர்ப்பு

கல்வி உத்தியோகத்தர் மாதாந்த மாநாடு இம்மாதம் 09ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு நா.கணேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் சமாசத்தால் தயாரிக்கப்படும் வருடாந்த கல்வித் திட்டத்தில் சங்கங்களின் கல்வித் திட்டத்தினையும் உள்ளடக்குவதற்கு வசதியாக சமாசத்தின் கோரிக்கைக்கமைவாக இம்மாநாட்டில் சங்கங்கள், கொத்தணிகள் தமது 2014ம் ஆண்டுக்கான கல்வித் திட்டத்தின் பிரதி ஒன்றினை சமாசத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இம் மாதம் கிளைக்குழுத் தேர்தல்கள் நடந்து முடிந்த சங்கங்களின் கிளைக்குழுத் தலைவர்கள், உப தலைவர்களுக்கான பயிற்சி ஒன்றினை வலிகாமம் கொத்தணி மண்டபத்தில் நடத்துவதற்கும் வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளரின் கோரிக்கைக்கு அமைய அனைத்து பணியாளருக்கான பயிற்சி ஒன்றினை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் சமாசத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீ அம்பாள் முன்பள்ளியின்...........1ம் பக்கத் தொடர்ச்சி

முதலாம் இடம் பெற்ற மாணவர்களையும் ஏனைய மாணவர்களையும் கௌரவித்து இப்பரசில் வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் திருமதி வே.செல்வரட்ணம், கௌரவ விருந்தினர்களாக மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் தலைவர் திரு கி.உமாசுதன், வலிகாமம் கொத்தணியின் பொதுமுகாமையாளர் திரு க.சுதாகரன், சமாச கல்வி உத்தியோகத்தர் திரு வ.சிவகுமார், பண்டத்தரிப்பு கல்வி உத்தியோகத்தர் திரு ஆ.கிறிஸ்துராசா, மானிப்பாய் சங்க பொதுமுகாமையாளர் திரு க.சற்குணலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.




இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2014ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.